**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 223/2019 |
| Name | : | Manikandan |
| P.W. | : | 1 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2023

**எதிரி ஆஜர் முதல் விசாரணை**

(1) நான் மடத்துக்குளம் கழுகரையில் வசித்து வருகிறேன். E – சேவை மையம் நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் விபத்தில் இறந்து போன மகாலிங்கம் எனது தந்தை ஆவார். கடந்த 03.03.2018 அன்று உடுமலை – பழனி ரோட்டில் இரவு 08.30 மணிக்கு எனது அப்பா அவருடைய TN 41 B 8177 Honda இருசக்கர வாகனத்தில் யூனியன் ஆபிஸ் மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்தார். நான் என் அப்பாவுக்கு பின்னால் என்னுடைய Discover TN 57 AZ 8876 என்ற வாகனத்தில் 10, 20 மீட்டர் தூரத்தில் பின்னால் சென்று கொண்டிருந்த போது எங்களுக்கு எதிர் திசையில் கிழக்கிலிருந்து

மேற்கு நோக்கி வந்த Mahindra max TN 39 H 8308 என்ற வாகனம் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் மேற்படி வாகனம் திடீரென எந்த வித சைகையும் இன்றி இடது புறம் வந்து எனது அப்பாவின் பைக்கின் மீது மோதியது அந்த விபத்தில் எனது அப்பாவுக்கு பின் தலையிலும், முழங்காலிலும், கண்ணிலும் போன்ற இடங்களில் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் என் அப்பாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று பின்பு மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்து மேல் சிகிச்சைக்காக மீண்டும் 04.03.2018 உடுமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்தோம் சிகிச்சை பலனின்றி என் தந்தை அன்று மாலை 4 மணிக்கு இறந்துவிட்டார். இது சம்மந்தமாக மடத்துக்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் என் தந்தை பைக் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் பெயர் பின்பு விசாரித்து பார்த்ததில் அவர் பெயர் அப்பாஸ் என்று தெரிய வந்தது. மேற்படி ஆஜர் எதிரி என் தந்தை பைக் மீது mahindra maz வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். மேலும் இந்த விபத்தில் இறந்து போன எனது தந்தையின் பிரேத விசாரணையின் போது பஞ்சாயத்தார் முன்னிலையில் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்த போது உடனிருந்து அடையாளம் காட்டினேன். போலீசாருக்கு விபத்து நடந்த இடத்தையும் நான் அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 223/2019 |
| Name | : | Lakshmi |
| P.W. | : | 2 |
| Father Name | : | Mahalingam |
| Village | : | Kazhukarai |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 03.03.2023

**எதிரி ஆஜர்,**

**முதல் விசாரணை**

நான் மடத்துக்குளம் கழுகரையில் வசித்து வருகிறேன். மில்லுக்கு வேலைக்கு செல்கிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். இந்த விபத்தில் இறந்து போனவர் எனது கணவர் ஆவார். 03.03.2018 அன்று நான் மலையாண்டிபட்டிணத்தில் ஒரு விஷேசத்தில் இருந்த போது எனது மகன் எனக்கு போன் செய்து எனது கணவருக்கு மடத்துக்குளம் யூனியன் ஆபிஸ் அருகே Mahindra வண்டி மோதி விபத்து ஏற்பட்டதாகவும், மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்வதாகவும்

சொன்னார்  பின்பு உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டு மீண்டும் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து சிகிச்சை பலனின்றி 04.03.2018 ம் தேதி இறந்துவிட்டார். இது சம்மந்தாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 223/2019 |
| Name | : | Selvakumar |
| P.W. | : | 3 |
| Father Name | : | Palanisamy |
| Village | : | Polarpatty |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 03.03.2023

எதிரி ஆஜர்

முதல் விசாரணை

(1) நான் போலார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பைனான்ஸ் தொழில் செய்கிறேன். 05.03.2018 அன்று 6 மணி அளவில் நான் மைவாடியில் இருந்து மடத்துக்குளம் வந்த போது மடத்துக்குளம் யூனியன் ஆபிஸ் அருகே விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். மேலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு போலீசார் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னுடன் குப்புச்சாமி என்பவரும் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை

மகஜரில் 1வதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குவி இல்லை.